அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 312

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.

18நவம்பர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,

திணைக்களத் தலைவர்களுக்கும்,

## படிப்பு விடுமுறை - இலங்கைக் கணக்காளர் சேவை

இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தருக்கு 03-ஆம் பந்தியில் காட்டப்பட்ட பரீட்சையொன்றினுக்குத் தோற்றுதற்கு முழுச் சம்பளத்துடன் கூடிய 10 (பத்து) நாட்கள் படிப்பு விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும்.

02. இந்த விடுமுறையை

(அ) பரீட்சை தொடக்கும் திகதிக்கு முந்திய ஒரு மாதகாலத்துக்குள் எடுக்க வேண்டும்.

(ஆ) எந்த நோக்கத்துக்காக எடுக்கிறார்களோ அதனை நிரூபிக்கும் எழுத்தாவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும்.

03. (1) இலங்கை பட்டயம் பெற்ற கணககாளர் நிறுவனத்தின்

தகுதிச்சான்றிதழ் பரீட்சை.
கூட்டு அங்குத்துவம் 1 ஆம் பாகம்.
கூட்டு அங்கத்துவம் 11 ஆம் பாகம்.

(11) இலண்டன் செலவின நிருவாகக் கணக்காளர் நிறுவனத்தின்

உயர் தொழில் 1 -ஆம் பாகம்.
உயர் தொழில் 11 -ஆம் பாகம்.
உயர் தொழில் 111 -ஆம் பாகம்.

(111) உயர் கல்வி அமைச்சின் தொழினுட்பக் கல்லூரிகளின் கணக்கியல் கல்வி நெறிகளில் டிப்ளோமா.

மூன்றும் வருடப் பரீட்சை

நான்காம் வருடப் பரீட்சை

ஒப்பம்: (டி.பீ.ஜ.பி.எஸ்.சிரிவர்தன
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

ந/08